அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை : 25/2014 (I)

எனது இல : EST – 4/PEMNT/03/0225
அரசாங்க நிர்வாக மற்றும்
உள்நாட்டலுவல்கள் அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2014.12.29

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாணங்களின் பிரதம செயலாளர்கள்
திணைக்களங்களின் தலைவர்கள்
அரச கூட்டுத்தாபனங்கள் நியதிச்சட்டச் சபைகள்

## தற்காலிக, அமைய ( நாளாந்த),பதில் கடமை, ஒப்பந்த மற்றும் சலுகை அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு 2015 வரவு செலவுத்திட்ட முன்மொழிவுக்கமைவாக நிரந்தர பதவியினை வழங்குதல்

மேற்படி விடயம் சம்பந்தமாக வெளியிடப்பட்ட 2014.11.12 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 25/2014 தொடர்பாக தங்களது கவனம் ஈர்க்கப்படுகின்றது.

02. மேற்படி சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கல்வித் தகைமைகளை பூர்த்தி செய்திராத ஆரம்பமட்ட சேவை வகுதிக்குரிய ஊழியர்களை நிரந்தரமாக்கும் போது அரசாங்கத்தினால் தீர்மானிக்கப்பட்ட நடவடிக்கைகள் பின்வருமாறு:

(I) அலுவலகப் பணியாளர் சேவைக்குறிப்பில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைகளில் கல்வித் தகைமைகளை பூர்த்தி செய்திராத போதிலும், 2014.05.01 ஆந் திகதி 03 ஆண்டுகால சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்த தற்காலிக அமைய (நாளாந்த), பதிலீட்டு, ஒப்பந்த அல்லது சலுகை அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்ட ஆரம்பமட்ட சேவை வகுதியைச் சேர்ந்த அலுவலர்கள் பின்வருமாறு நிரந்தர பதவிகளுக்கு இணைத்துக்கொள்ளல்.

(அ) கல்வித் தகைமைகளை பூர்த்தி செய்யும் பொருட்டு 10 வார இறுதி நாட்களைக் கொண்ட பயிற்சி நெறியொன்றை ஒழுங்கமைத்தல்.

(ஆ) அப் பயிற்சிநெறியினை, இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் கண்காணிப்பு மற்றும் வழிகாட்டலின் கீழ் மாவட்டச் செயலக மட்டத்தில் நடாத்துதல்.

(இ) பயிற்சியின் இறுதியில் தகைமை பெறும் அலுவலர்கள் தொடர்பாக இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் மூலம் முறைசார் சான்றிதழ் வழங்குதல்.

(ஈ) அச் சான்றிதழை பெற்றுக் கொண்ட அலுவலர்கள் 8 ஆம் தரத்தில் சித்தியடைந்தவர்களாக கருதப்படுவர்.

03. மேற்படி 02 (I) உப பந்தியில் குறிப்பிடப்பட்ட தகைமைகளை பூர்த்தி செய்யும் பொருட்டு தேவைப்படும் தகுந்த பயுற்சிநெறிகளை நடாத்துவது சம்பந்தமாக மாவட்டச் செயலாளர்களுடன் கலந்துரையாடி, முறைசார்ந்தவாறு அப் பயிற்சிநெறிகளை நடாத்துவதற்கு குறித்த நியமன அதிகாரியினால் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

04. உள்ளூர் நிதியைக் கொண்டு நடைமுறைப்படுத்தப்படும் செயற்திட்டங்களில் தற்காலிக அமைய (நாளாந்த), பதிலீட்டு, ஒப்பந்த அல்லது சலுகை அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டு, அப்பணிகளுக்காக சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 25/2014 இல் உள்ளடக்கப்பட்டுள்ள சம்பள குறியீட்டுக்குரிய பதவிகளில் சேவையில் அமர்த்தப்பட்டுள்ளவர்களுக்கு, அப் பதவிகளிலேயே நிரந்தர நியமனம் வழங்குவதற்கு குறித்த நியமன அதிகாரியினால் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

05. வெளிநாட்டு நிதியங்களிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும் அபிவிருத்தி செயற்திட்டங்கள் தொடர்பாக அல்லது அவ்வாறான செயற்திட்டங்களில் உள்நாட்டு சேவை வழங்கல் நிறுவனங்களினால் ஆட்சேர்க்கப்பட்டு சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள அலுவலர்களையும் 04 ஆம் பந்திக்கமைய நிரந்தரமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

06. இச் சுற்றறிக்கை பொதுத் திறைசேரியின் இணக்கப்பாட்டுடன் வெளியிடப்படுகின்றது.

ஒப்பம்/ பி.பீ. அபேகோன்
செயலாளர்
அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு